1969 செப்டம்பர் 13]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்பொழுது நம்முடைய சொந்தக் கட்டடத்தில்தான் இருக்கிறது. நாம் மவுண்ட் ரோடில் வாங்கிய கட்டடத்தில் கோ-ஆப்டெக்ஸ் ஜாரி மியூஸியம் துவங்கப் பட்டது. அதற்கு 1,000 ரூபாய் வாடகை கொடுக்கப்படுகிறது. நமக்கு 767½ ரூபாய் வாடகை வருகிறது. நாம் அந்தக் கட்டடத்தை வாங்கியவுடனே அங்கே குடியிருக்கிற நபர்களை வெளியேற்ற முடியவில்லை. அவர்கள் வழக்கு மன்றத்திற்குச் சென்றார்கள். உயர் நீதிமன்றம் நமக்குச் சாதகமாகத் தீர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் அதற்கு மேலே உயர்நீதிமன் றத்திற்குச் சென்று கொண்டிருக்கிறார்கள்.

காஞ்சிபுரத்தில் சரிகை தயாரிக்கும் பிரிவு

* 288 வினா.—திரு. பெ. மலைச்சாமி : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரத்தில் கூட்டுறவுத் துறையில் சரிகை தயாரிக்கும் பிரிவு ஒன்று நிறுவப் பெற்றுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ): இல்லை.

காஞ்சிபுரத்தில் கூட்டுறவுத் துறையில் சரிகை தயாரிக்கும் பிரிவு ஒன்றை அமைக்கும் திட்டத்திற்கு அரசு கொள்கையளவில் ஒப்புதல் வழங்கியுள்ளது. இத் திட்டத்தை நிறைவேற்ற தொடக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

காகிதத் தொழிற்சாலைகள்

* 289 வினா.—திரு. ஆர். கருப்பையா : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம் லால்குடி வட்டத்தில் காகிதத் தொழிற்சாலை (Paper factory) நிறுவும் எண்ணம் ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

* 290 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal to start a paper factory at Hosur Taluk; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) இடமில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : There is an extensive bamboo forest near Denkinikota in Hosur taluk with a sizable lantana growth, and with the available raw material it is possible to start paper manufacture on a cottage industry basis. It will provide work for the suffering people and the effect of the drought will be reduced. On this score will the Hon. Minister make arrangements for a re-investigation of the matter?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தத் தொழிற்சாலை டிலைசென்ஸ் செய்யப்படாது. விலைவாசி ஏறியிருக்கின்ற நிலைமையில் இந்தத் தொழிற்சாலையில் நாம் ஈடுபடுவது நல்லதல்ல என்று நினைக்கிறேன்.

அரசு தொழிற் பயிற்சிப் பள்ளி மாணவர்கள்

* **291 வினா.—திரு. எஸ். கணேசன் :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டுதோறும் அரசினர் தொழிற்பயிற்சிப் பள்ளி (G.I.T.I.) களிலிருந்து எவ்வளவு மாணவர்கள் பயிற்சி முடித்து வெளிவருகிறார்கள் ?

(இ) அவர்கள் எல்லோருக்கும் வேலை வாய்ப்பு கிடைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) கிட்டத்தட்ட 6,000 பேர்.

(இ) தொழிற் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி பெறுவோருக்கு வேலை தேடித்தருவதில் வேலை வாய்ப்பகம் தனி அக்கறை செலுத்துகிறது. தொழிற் பயிற்சிப் பள்ளித் தலைவர்களும் அவர்களைப் பணியிலமர்த்துவதற்கும் தொழில் பழகச் செய்வதற்கும் தங்களாலியன்ற எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றனர்.

திரு. எஸ். கணேசன் : தொழிற்பேட்டைப் பள்ளிகளிலே படித்துத் தேர்வுபெற்றவர்கள் வெளியே வரும்பொழுது அவர்களுக்கு வேலை கிடைக்காத நிலைமை இருக்கிறது. இதன் காரணமாகத் தொழிற்பேட்டையில் படிக்க வருகிற மாணவர்களின் எண்ணிக்கை குறைந்திருக்கிறது. எனவே, இதைப் பரிசீலனை செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வேலையில்லாத் திண்டாட்டம் நாட்டிற்குப் பொது. இந்தப் பள்ளியிலே படிக்கிற காரணத்தினாலே வேலையில்லாத் திண்டாட்டம் என்று ஏற்படவில்லை. இதிலே படிக்கின்றவர்களுக்கும் வேலை வாங்கித் தருகின்ற அலுவலகத்திற்கும் தொடர்பு ஏற்படுத்த அரசாங்கம் தன்னால் ஆன முயற்சிகளைச் செய்து வருகிறது.